# நடிகர் சம்பந்தப்பட்ட டிபிகேஎல் திட்டம்: விசாரணை அடுத்த வாரம் முடிவடையும்



பெட்டாலிங் ஜெயா, பிப். 2- நடிகரும் இயக்குநருமான அஃப்ட்லின் ஷவுக்கியை தொடர்பு படுத்தும் கோலாலம்பூர் மாநகர மன்றம் (டிபிகேஎல்) சம்பந்தப்பட்ட ஒரு 40 லட்சம் வெள்ளி திட்டத்தில் தவறுகள் நிகழ்ந்துள்ளன என்று கூறும் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை அடுத்த வாரம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிபிகேஎல்லின் உயர் நெறி பிரிவு தனது விசாரணையின் ஒரு பகுதியாக, மாநகர மன்ற ஆலோசகர்கள் வாரியத்தின் ஓர் உறுப்பினருமான அஃப்ட்லின் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைக்கவுள்ளது என்று கூட்டரசுப்பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாஃபா கூறினார்.

தமக்கு எதிராக கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை மறுக்கும் உரிமை அஃப்ட்லினுக்கு உள்ளது. எனினும், அரசாங்கத்தை பொறுத்தவரையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் நேற்று புத்ரா ஜெயாவில் ஒரு நிகழ்ச்சியை தொடங்கி வைத்த போது தெரிவித்தார்.

பொது டெண்டருக்கு அழைப்பு விடுக்காமலேயே ஒரு திட்டம் வழங்கப்பட்டதில் அஃப்ட்லின் சம்பந்தப்பட்டுள்ளார் என சமூக ஊடகங்களில் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை டிபிகேஎல் விசாரணை செய்து வருவதாக மேயர் மைமுனா ஷாரிஃப் கடந்த செவ்வாய்க்கிழமை கூறினார்.

அந்த திட்டத்தில் தவறுகள் நிகழ்ந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டதை தொடர்ந்து போலீஸில் தாம் புகார் செய்திருப்பதாக அஃப்ட்லின் நேற்று முன்தினம் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தை விசாரணை செய்வதில் டிபிகேஎல்க்கு உதவ தான் தயார் என மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் ஏற்கெனவே கூறியுள்ளது.